வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 42 of 2016

வழக்கு சாட்சி – PW 9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கருணாகரன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | முருகேசன் | தொழில் | : | உதவி ஆய்வாளர் ஓய்வு |
| கிராமம் | : | சூலூர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | கோவை | வயது | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 25.07.2023.

(எதிரி ஆஜர்).

முதல் விசாரணை: நாள்: 25.07.2023

1. நான் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு வருகிறேன். நான் கடந்த 07.10.2015 ம் தேதி அவிநாசிபாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது இரவு 11.00 மணிக்கு தொங்குட்டிபாளையம் கைகாட்டிபுதூர், காயத்திரி கார்டன் ராஜன் மகன் மணிகண்டன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று அவிநாசிபாளையம் காவல் நிலைய குற்ற எண்.609/2015, சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதச கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5** ஆகும். அசல் முதல் தகவல் அறிக்கையுடன், வாதியின் புகாரினை இணைத்து கனம் நீதிமன்ற நடுவருக்கு அனுப்பிவைத்தேன். புலன் விசாரணைக்காக வழக்குகோப்பை காவல் ஆய்வாளர் திரு.முருகாசலம் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

2. வழக்கு விபத்தானது எவ்வாறு எற்பட்டது என்று குறிப்பிட்டு அ.சா.1 அவரது புகாரில் சொல்லவில்லை என்றால் வாகனம் நெருக்கு நேராகா மோதியதா, பக்கவாட்டில் மோதியதா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் பதிவு செய்த முதல்

தகவல் அறிக்கையை மறுநாள் எழுத்தர் வசம் ஒப்படைத்துவிட்டேன். நீதிமன்றத்திற்கு 6 நாட்கள் காலதாமதத்தில் அனுப்பப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் நான் சொன்ன விதத்தில் புகார்மனு பெறப்படவில்லை என்றும், வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.07.25 20:06:37 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.